DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC. 417 / 2022
Deposition of witness for PW.12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு. திருப்பதிராஜ் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.03.2023

(A1 இறந்துவிட்டார், 2–4 ஆஜரில்லை. எதிரிகள் 2–4 சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருவில்லிபுத்தூர் வடக்கு ரதவீதியில் குடியிருந்து வருகிறேன். கட்டிட மதிப்பு மற்றும் திட்டம் இது சம்மந்தமாக தொழில் செய்து வருகிறேன். கடந்த 27.01.2015 ம் தேதி சாமிநத்தத்தில் உள்ள சர்க்கரை மற்றும் கருப்பசாமி ஆகியோரின் சேதமடைந்த வீட்டை பார்வையிட்டு சதுர அடிக்கு 1500 வீதம் மொத்தமாக 456 சதுர அடிக்கு சேதம் மதிப்பு மொத்தம் ரூபாய் 6,84,000/– என சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்று அ.சா.ஆ.8 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. நான் தனியார் கன்சல்ட்டேன்ட் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதி எனக்கு தெரியாது. நான் அ.சா.ஆ.8 ஐ 27.01.2015 ம் தேதி வழங்கினேன் என்றால் சரிதான். சதுர அடி அளவை வைத்து மட்டுமே சேத மதிப்பை அளவிட்டேன். வேறு எந்த காரணமும் கூறவில்லை என்றால் சரிதான். கருப்பசாமி மற்றும் சர்க்கரை என்பவர் கேட்டுக் கொண்டதால் சேத மதிப்பீடு கொடுத்தேன்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC. 417 / 2022
Deposition of witness for PW.11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு. கணேசன் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.03.2023

(A1 இறந்துவிட்டார், 2–4 ஆஜரில்லை. எதிரிகள் 2–4 சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சித்துராஜபுரத்தில் குடியிருந்து திருவில்லிபுத்தூர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நகர் மேற்கு பிரிவு அலுவலகத்தில் வருவாய் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். 2014ம் ஆண்டு மல்லி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணையின் போது 268009451 என்ற எண் கொண்ட மின்சார வசூல் ரசீதை சர்க்கரை என்ற பெயரும், 268009452 என்ற எண் கொண்ட மின்சார வசூல் ரசீதை கருப்பசாமி என்ற பெயருடன் எனது அலுவலக பதிவேட்டின் படியும் அவர்கள் செலுத்திய ரசீதின்படி உள்ளது என கணிணியின் மூலம் ஆயவு செய்ததில் தெரியவந்நது. சர்க்கரை என்வரின் வீட்டு மின்சார வரி ரசீது **அ.சா.ஆ.**6 ஆகும். கருப்பசாமி என்பவரின் வீட்டின் மின்சார வரி ரசீது **அ.சா.ஆ.7** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

மின் இணைப்பு எப்போது யாரால் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. மின் பில் தொகையை நான் வசூலித்தேனா என்றால் இல்லை. வேறு ஒரு அலுவலர் தான் வசூல் செய்து அதை கணிணியில் பதிவு செய்வார். அந்த அலுவலரின் கட்டுப்பாட்டில் தான் கணிணி இருக்கும் என்றால் சரிதான். அந்த அலுவலரிடமிருந்து நான் அ.சா.ஆ.6,7 தொடர்பான எந்த ஒரு சான்றாவணமும் பெறவில்லை என்றால் சரிதான். சான்றாவணம் இல்லாமல் நான் அ.சா.ஆ.6, 7 தொடர்பாக சாட்சியம் அளிக்க

முடியாது என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC. 417 / 2022
Deposition of witness for PW.10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு. செந்தில்வேல் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.03.2023

(A1 இறந்துவிட்டார், 2–4 ஆஜரில்லை. எதிரிகள் 2–4 சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எஸ்.புதுப்பட்டியில் குடியிருந்து சாமிநத்தம் பஞ்சாயத்து ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1–ஐ தெரியும். எதிரிகளை தெரியும். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு மல்லி போலீசார் என்னிடம் வந்து சர்வே எண்.1392/2 க்கு கதவு எண் கேட்டதன் பேரில், அதற்கு கதவு எண்.139 எனவும் , மற்றொரு வீட்டிற்கு கதவு எண்.140 எனவும், ரசீது வழங்கினேன். கதவு எண்.1/139 வீட்டின் ரசீது ஜெராக்ஸ் நகல் எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனை பேரில் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கதவு எண்.1/140 வீட்டின் நான் வழங்கிய ரசீது **அ.சா.ஆ.5** ஆகும். கருப்பசாமி , சர்க்கரை ஆகியோர்களின் வீடுகளை எதிரிகள் இடித்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

1. வீடு தொடர்பான பிரச்சினைகள் அனைத்தும் வருவாய் துறையினருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். நான் மேலே கூறியுள்ள வீடு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொதுவாக ஒரு வீடு தொடர்பாக பிரச்சினை நீதிமன்றத்தில் நிலுவையில் இ ருப்பதாக எங்களிடம் கூறியிருந்தால் நாங்கள் ரசீது வழங்க மாட்டோம். வீடு எண்.139, 140 க்கு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அ.சா.ஆ.4, 5 2013-ல் வழங்கப்பட்டுள்ள ரசீது என்றால் சரிதான். பொதுவாக வீட்டுத் தீர்வை பாக்கியை தாமதாமாக கட்டும் போது பழைய வரிவிதிப்பின் குறிப்புகளுடன் கட்டும் தேதியுடன் நிலுவை கட்டியுள்ள தேதியுடன் போடப்படும். அ.சா.ஆ.4, 5 காவலர்கள் கேட்டுக் கொண்டதால் முன் தேதியிட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.